நாள் 11.10.2019

சி.பி.5/2019
MW -1 Thiru.K.Premkumar

குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பு-

மனுதாரரை வேலை நீக்கம் செய்தபோது நான் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கீழ் வேலை செய்தேன் என்றால் ஆமாம். அந்த சமயத்தில் எனக்கு சம்பளம் வழங்கியது யார் என்றால் 2ம் எதிர்மனுதாரர் நிர்வாகம். அந்த சமயத்தில் தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் மற்றும் தென்னிந்திய தோட்ட உத்தியோகஸ்தர்கள் சங்கம் ஆகியவை ஏற்படுத்தும் ஒப்பந்தப்பங்கள் அடிப்படையில் தான் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அமாம். அவ்வாறு ஒப்பந்தம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படுத்தப்படும் என்றால் அமாம். அவ்வாறு ஏற்படும் ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் மனுதாரர இந்த மனுவில் தொகைகளை கணக்கீடு செய்துள்ளார் என்றால் அமாம். 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் ஏற்பட்ட 30.10.09 குத்தகை ஒப்பந்தப்படி 1.11.09 ல் தேதி முதல் தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் சம்பளம் வழங்கவேண்டிய பொறுப்பு 2ம் எதிரமனுதாரருக்குத்தான் உள்ளது என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரர் கடிதம் கொடுத்தால் மனுதாரருக்கும் மீண்டும் வேலை வழங்க 2ம் எதிர்மனுதாரர் தயாராக உள்ளதாக கூறியுள்ளார் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் அவ்வாறு கடிதம் வழங்க மறுப்பது ஏன் என்றும் கேட்டால் குத்தகை ஒப்பந்த தேதிக்கு முன்னால் பணி நீக்கம் ஏற்பட்டிருந்தால் நாங்கள் கடிதம் கொடுக்கலாம் ஆனால் மனுதாரரின் பணிநீக்கம் குத்தகை தேதிக்கு பிறகு ஏற்பட்டள்ளதால் நாங்கள் கடிதம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குத்தகை ஒப்பந்தம் பிரிவு 16 ன் அடிப்படையில் கூறுகிறேன். மனுதாரர் தொழில்தாவாவில் ஏற்பட்ட திர்வத்தின்படி இந்த மனுவில் கேட்டள்ள பரிகாரங்களை பெறுவதற்கு உரிமை உள்ளது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை - இல்லை.